முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1375

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.07.2023, புதன்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் பலம் கொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற அரங்கனே
வரமாக தர்மம் வளர்க்கின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 20 ம் நாள், 05.07.2023, புதன்கிழமை)
ஆசிதந்து அரங்கன் உன்னுள்ளே ஆறுமுகன் யான்
வாசிவென்று உந்தனுக்கு துணையாக வரம்கூட்டி உன்னுடன் அருளிவர
3. வருகவே அரங்கன் உன் சொல்செயல்கள்
வைகயத்தில் அனைத்துமே வேதமாக
தர்மம் பெருக்கி இந்த கலியுகத்தில்
தரணியோர்க்கு பெருந்துணையாய் நின்றருளும்
4. அருளவே அரங்கன்நீ அகிலத்தைக்காக்கும் ஆற்றல்மிக்க ஞானியப்பா
பெருமை கொண்டு உன் திருவடி பற்றி
பூவுலகோர் சரணாகதி அடைந்து
பிசகில்லா தீட்சைதனை அடைந்து
5. அடைந்து அரங்கா முருகா என
அனுதினம் ஜெபதபங்கள் செய்துகொண்டு
சோடைநீக்கும் அரங்கன் நீதரும் தர்மத்தை
சுருதிபடி அருளமுதாக உண்டு உலகோர்
6. உலகமெல்லாம் அவை தர்மம் வளர
உயர்வான வழிகாட்டல் செய்தால் போதும்
பெருமைமிக்க ஆறுமுகன் யான் வெளிப்படுகின்ற
பிரணவ சக்திமிகு என் தலைமை கொண்ட

7. வறுமைவெல்லும் உலகை பாதுகாக்கின்ற
வல்லமையான ஞான ஆட்சிக்காலம்
காலமதை அரங்கன் வேண்டலுக்காய்
கந்தவேலன் கலியினில் சித்தியாக்குவேன்
8. கோலமதாய் அனைத்து கலிமாயைகளை விரட்டி
குவலயத்தை பாதுகாப்பு மிக்க
ஞான பூமியாக மாற்றுவேன்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–